கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம், பெரியகுளம்

வழக்கு எண் MCOP No. 25/2023

நாள் 03.01.2025

**மனுதாரர் தரப்பில் மசாஆ 1 ஆஜராகி, 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

(ம.சா. 2 – கண்ணன் முன்னிலையானார், சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்)

**2ம் எதிர்மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் பார்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். நான் எந்த இடத்திலிருந்து விபத்தை பார்த்தேன் என்றால் சிவா ஹோட்டல் முன்பாக நான் நின்று கொண்டிருந்தபோது விபத்தை பார்த்தேன். விபத்து நடந்த இடம் திண்டுக்கல்–வத்தலக்குண்டு மெயின் ரோடு என்றால் சரிதான். அது கிழமேல் சாலை என்றால் சரிதான். நான் நின்று கொண்டிருந்த சிவா ஹோட்டல் ரோட்டின் தெற்கு பக்கம் என்றால் சரிதான். கார் திண்டுக்கல்லிலிருந்து பெரியகுளம் நோக்கி கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். திண்டுக்கல்லிலிருந்து பெரியகுளம் நோக்கி செல்லும் காருக்கு இடதுபக்கம் அதன் தெற்கு பக்கம் என்றால் சரிதான். கார் ஓட்டுநர் சாலை விதிகளை கடைபிடித்து இடதுபக்கமாகத்தான் ஓட்டி வந்தார் என்றால் கார் ஓட்டுநர் இடதுபக்கமாகத்தான் ஓட்டி வந்தார். சிவா ஹோட்டல் வத்தலக்குண்டு பைப்பாஸ் ரோடும், திண்டுக்கல்–வத்தலக்குண்டு மெயின் ரோடும் இணைகின்ற இடத்தில் உள்ளது என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபர், தனது இரு சக்கர வாகனத்தில் ரோட்டின் வடக்கு பக்கமிருந்து, தெற்கு பக்கமாக ரோட்டை கடக்கும்போதுதான், விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபர் விபத்து சமயத்தில் மது அருந்தியிருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இரு சக்கர வாகனத்தில் இறந்த நபர் மட்டுமே இருந்தார். இந்த விபத்து இறந்த சதீஸ்குமாரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் எதுவும் வரவில்லை, மனுதாரர்கள் கேட்டுக் கொண்டதால் சாட்சியமளிக்க வந்துள்ளேன். நானும், சதீஸ்குமார்

தென்னைமரம் ஏறி கூலி வேலை செய்து வந்தோம் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஒரு மாதத்தில் எங்களுக்கு 15 நாட்கள் வேலை கிடைக்குமா என்றால் 26 நாட்கள் வேலை கிடைக்கும். தென்னை மரம் ஏறும் சங்கத்தில் நாங்கள் உறுப்பினர்களாக இருக்கிறோமா என்றால் இல்லை. நாங்கள் இருவரும் தென்னை மரம் ஏறும் வேலை செய்யவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் விபத்தை பார்க்கவில்லை என்றாலும், மனுதாரர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
03.01.2025
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.